# 4-ம் கட்ட பேச்சுக்கள் சனிக்கிழமை நடைபெறும்

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நாலாம் கட்டப் பேச்சுக்கள் எதிர் வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென 'ஐலன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

3ம் கட்ட பேச்சுக்களில் கலந்துகொண்ட அதே குழுக்களே இரு தரப்பிலும் கலந்து கொள்ளும் என அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பேச்சுக்களின்போது 3ம் கட்டத்தில் புலிகள் வலியுறுத்திய விடயங்களின் பதிலை அரசு தரப்பினர் புலிகளிடம் தெரிவிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பதிலில் பூநகரி பாதை திறப்பது தொடர்பான விடயம் மேலும் சிக்கலை ஏற்படுத்தலாமென எதிர்

(2-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 11 இதழ் 355
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-1-1995

## சமாதானம்குறித்து யாழ்ப்பாணத்தில் கூட்டம்

(கொழும்பு)

அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அவசர கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற 3ம் கட்டப் பேச்சில் சில விடயங்கள் தொடர்பாக இரு தரப்புக்குமிடையில் எழுந்த தேக்க நிலையை போக்கும் வகையில் இந்த அவசர கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இந்த கூட்டத்திற்கு இரு தரப்பினரிடையேயும் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் மத்தியஸ்தம் வகிக்கும் என

2-ம் பக்கம் பார்க்க

### வடக்கு - கிழக்குப் பகுதியில்

# அனுவசியமான யுத்தத்தை தொடரும் நிலையில் நாடு இல்லை!

### படையினர் மத்தியில் சந்திரிகா தெரிவிப்பு!!

[கொழும்பு]



வடக்குக்-கிழக்குப் பகுதியில் அனுவசியமான ஒரு யுத்தத்தைத் தொடரும் நிலையில் நாடு இல்லை எனவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான கடப்பாட்டை இந்த அரசாங்கம் கொண்டிருக்கிறது எனவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்று கொழும்பில் படை அதிகாரிகள் மத்தியில் உரை நிகழ்த்தியபோது கூறினர்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாபபு கல்விக்கழகத்தின் பட்டமளிப்பு விழா, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறறபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு கூறினர்.

அந்த வைபவத்தில் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது;-

கடந்த தேர்தல் காலத்தின் போது வாக்களித்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கென பொது சன ஐக்கிய முன்னணி அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

## படகுசேவையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று 25ம் திகதி முதல் கிளாலி படகு சேவை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 4 மணி முதல் நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

-ரி

## "ஐந்து வருடங்களுக்கு நிர்வாகபொறுப்புபுலிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும்"

(கொழும்பு)

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெறும் பேச்சுக்கள் வெற்றியளிக்கவேண்டுமாயின், ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களுக்காவது வடக்கின் நிர்வாகப் பொறுப்பை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானம் செய்து கொள்வதற்கும் தீர்வொன்றை துணிந்து கொண்டுவருவதற்கும் சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது,

சமாதானப் பேச்சுக்கள் முறிவடையாது தொடருவதற்கும் அரசு விட்டுக் கொடுக்கும் தன்மையையும் விடுதலைப் புலிகளுக்கு சாதகமான தன்மைகளைப் பெற்றுக் கொடுக்கவும் ஆயுத்தமாக இருக்க வேண்டுமென ஒரு

(6ம் பக்கம் பார்க்க)

## படைத் தளபதிகளை நீக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அலரிமாளிகையில் வெடிக்க வைப்பதற்கான வெடிமருந்துப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத்தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரைப் பதவியில் இருந்து நீக்குமாறு

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. புனரமைப்புக்கு ரணில் நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைப்புக் செய்யும் நடவடிக்கையில், எதிர்க் கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார். இந்தப் புனரமைப்புக் கூட்டம்

(6-ம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்னைத் தீர்வுக்கு

## இருவேறு சுதந்திர அரசுகள் அமையும் என எதிர்பார்ப்பு!

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுக்கு இருவேறு சுதந்திர அரசுகளின் ஒன்றியம் என்ற அளவிலான ஒரு அரசியல் அமைப்பு பற்றிய எதிர்பார்ப்பும் நிலவுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வுத்தேச குடியரசுகளின் ஒன்றிய அமைப்பின் கீழ் ஸ்ரீலங்கா, தமிழீழம் என இருகுடியரசுகள் அமையும் இவை இரண்டும் இரண்டு நாடாளுமன்றங்களை கொண்டிருக்கும் என்றும் இவற்றிற்கு தனித்தனியாக இருவேறு பிரதமர்கள் இருக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய உத்தேச ஒன்றியத்தில் முஸ்லிம், மலையக மக்களின் நிலைமை தொடர்பாக இதுவரை எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும், இதுவரையும் இவ்

(6ம் பக்கம் பார்க்க)

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' திட்டத்துக்கு அரசு அனுமதி

[கொழும்பு)

'வொய்ஸ் ஒப அமெரிக்கா' உடன்படிக்கை தொடர்பாக ஆராய்ந்த நான்கு உறுப்பினர்கள் கொண்ட அமைச்சர் மட்ட அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்

(6ம் பக்கம் பார்க்க)

★ கந்தளாய்

## சீனி தொழிற்சாலை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

பல மாதங்களாக மூடப்பட்டிருந்த கந்தளாய் சீனித் தொழிற்சாலை மீண்டும் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை மூடப்பட்டதனல் ஆயிரத்திற்கும் அதிக

(6ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

**தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள்**

சகலவிதமான தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளும் சேவை அடிப்படையில் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும். இடம்: அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். ஏ-4749)

**சைவசமய அறிவுப் பரீட்சை**

(உடுவில்[

யாழ்ப்பாணம் வண்ணர் பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடாத்தப்படும் சைவசமயப் பரீட்சை பெப்வரி 12, 14ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. செயல்முறைப் போட்டிகள் பெப்ரவரி 19ம் திகதி நடைபெறும். -109

**வருடாந்த உற்சவம்**

[[நெல்லியடி]

புலோலி - தெற்கு சந்தா தோட்டம் [முதலி] மனோன் மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் பெப்ரவரி 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினெரு தினங்கள் உற்சவம் நடைபெற்று 16ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும். -160

**வீரவணக்கக் கூட்டம்**

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் ஜனவரி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்க கூட்டம் ஒன்று கடந்த 22ம் திகதி யாழ். நக்கா வீதி நரிக்குண்டடியில் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. 59

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

பயிராக்கவியல்|மிருக விஞ்ஞானம்/விவசாயப் பொருளியல்/ விவசாய பொறியியல்/ விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான 1994-12-28ந் தேதிய விளம்பரத்திற்கு மேலதிகமாக.

இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு தேதி 1995-02-10ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1995-01-24.

(எ-4753)

---

நிறைவேற்று அதிகாரமுள்ள

## ஜனாதிபதிமுறை மாற்றத்திற்கு ஐ.தே.க. ஆதரவு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறையை நீக்கி பிரதமருக்கு அதிக அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி ஆதரவு வழங்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான ஏ. சி. எஸ். ஹமீத் நந்தா மத்தியு, விஜேபால மெண்டிஸ், பி. தயாரத்ன ஆகியோர் தற்போதைய தலைவரான ரணில் விக்கிரமசிங்காவுக்கு இது பற்றி வலியுறுத்தியுள்ளனராம். -க

---

விவசாயிகளுக்கு

## உருளைக்கிழங்கு கடன் வழங்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய நிதியத்தினூடாக 1994/95 ஆண்டு காலபோக உருளைக்கிழங்கு செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கடன்களை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் இம்மாதம் 2ம் கட்டமாக கோப்பாய் வட்டத்தில் 183 பயனாளிகளுக்கும், உடுவில் வட்டத்தில் 81 பயனாளிக்கும், நல்லூர் வட்டத்தில் 9 பயனாளிகளுக்குமாக மொத்தமாக 273 பயன்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

நோ. ந. சங்கம்

## நூற்றுக்கு மேற்பட்ட நோயாளருக்கு குருதிக் கொடை

]யாழ்ப்பாணம்]

நோயாளர் நலன்புரிச் சங்கம் நோயாளர்களின் நலன் கருதி சென்ற வருடம் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் குருதிக் கொடை வழங்கியுள்ளது என இச்சங்கத்தின் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: நோயாளர் நலன்புரிச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரும் வசதி குறைந்த நோயாளர்களின் நலன் கருதி இவர்களைப் பராமரிக்கும் சேவையை மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் சென்ற வருடத்தில் நூற்றுக்கணக்கான வசதி குறைந்த நோயாளர்கள் எமது சங்கப் பணியாட்களால் பராமரிக்கப்பட்டுள்ளார்கள்.

நோயாளர் நலன்புரிச் சங்கம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு தற்பொழுது பருத்தித்துறை. கிளிநொச்சி ஆகிய பகுதிகளிலும் இயங்கி வருகிறது.

இச்சங்கம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வசதி குறைந்த நோயாளர்களைப் பராமரிப்பதுடன் தூர இடங்களிலிருந்து வந்து வைத்திய சிகிச்சை பெறும் வசதி குறைந்த நோயாளர் திரும்பத் தமது இடங்களுக்குச் செல்வதற்கான பிரயாணத் தேவைகளுக்காகப் பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களின் நன்மை கருதி இவர்களுக்கான நூலக சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வசதி குறைந்த நோயாளர்களின் தேவைகளுக்கான குருதிக்கொடை வழங்குவதுடன் வலுவிழந்தோருக்கான மறுவாழ்வு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். -162

---


யாழ் வணிகர் கழகம்

## பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

காலம்: 27-01-95 வெள்ளிக்கிழமை

நேரம்: பிற்பகல் 2-30 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி
குமாரசாமி மண்டபம்

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை தொழிற்றுறை உறுப்பினர்களும் கலந்துகெகள்வார்கள். கூட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து சகலதுறை வணிகப் பெருமக்களும் தவருது சமுகம் கொடுக்கவும்.

சகல வணிகநிலையங்களும் அன்று பிற்பகல் 2-00 மணியுடன் முழுமையாகப் பூட்டி இக் கூட்டத்திற்கு தவருது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

இங்ஙனம்

செ. வே. சிற்சபேசன் — தலைவர்
நா. த. அன்னலிங்கம் — பொதுச் செயலாளர்

(எ-4752)


---

ஐ. தே. க. விலிருந்து

## காமினி, டி.பி. ஆதரவாளர் ஒரம் கட்டப்படுகிறார்கள்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியில் உள்ள மறைந்த காமினி திசநாயக்காவின் ஆதரவாளர்களையும் முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்காவின் ஆதரவாளர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓரம் கட்டி வருவதாக 'யுக்திய' தெரிவித்துள்ளது.

ஜயலத்ஜயவர்த்தன, வஜிர அபவர்த்தன, தகம் விமலசேன, காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகிய உதவிச் செயலர்கள் இந்த ஓரங்கட்டலில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ம-ரி

---

## சிறிசேனகூரே மீண்டும் அரசியலில் ஈடுபடுவார்

[கொழும்பு]

ஐ. தே. கட்சியின் முன்னாள் சிரேஷ்ட அமைச்சரான திரு. சிரிசேன கூரே மீண்டும் அரசியலில் ஈடுபடவிருப்பதாக கொழும்புப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் தற்போது இந்தியா பயணமாகியுள்ள இவர் ஐ தே. கட்சியின் உள்ளூராட்சி தேர்தல் கொழும்பு பட்டியலில் இவருக்கு முன்னுரிமை அளிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நெருங்கிய சகாவான இவர் பிரேமதாசாவின் மறைவையடுத்து ஐ. தே. க. வினரால் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்ததும் அறிந்ததே.

மீண்டும் ரணில் வீக்கிரமசிங்கா ஐ தே க. கட்சி தலைவராக பொறுப்பேற்றதையடுத்து இவரது முக்கியம் ஐ. தே. க. வட்டாரத்தில் அவசியமாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க

---

## சிகிச்சை

(நெல்லியடி)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம உதவியுடன் கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாசனிடம் கண் சிகிச்சை பெற்றுக் குணமடைந்த சுமார் பன்னிரு நோயாளிகளின் மீள் சிகிச்சை இம்மாத இறுதியில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவிருக்கின்றது. -160

---

தமிழ் கட்சிகள்

## ஒன்றிணைந்து செயல்பட முடிவு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இனப்பிரச்னை சம்பந்தமாக நாடாளுமன்றில் இணைந்து இயங்குவதற்கு குரல் எழுப்புவதற்கு தீர்மானித்திருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தத் தமிழ் கட்சிகள் விரைவில் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்துப் பேச இருப்பதாகவும் 'லங்காதிப' மேலும் தெரிவித்தது. -ம

---

## உடுபிடவை அன்பளிப்பு

[கொழும்புத்துறை)

இயக்கச்சி அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மொத்தம் 124 மாணவிகளுக்கு வழங்கவென முப்பதாயிரம் ரூபா பெறுமதியான உடுபிடவைகளையும் இப்பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தலா நான்கு அப்பியாசக் கொப்பிகளையும் முகமாலை பங்குத் தந்தை அருட்திரு ஸ்ரெலின் அடிகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். -154

---

## கௌரவிப்பு

[நெல்லியடி]

இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் அமைப்பதற்கு காணியை அன்பளிப்புச்செய்ய அதேஇடத்தைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவசுந்தரம் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்

இன்பருட்டியில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க புதிய அலுவலகத் திறப்புவிழாவின் போது பருத்தித்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. என். மகேசன் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். இவ்வைபவத்தில் கடற்றொழிலாளர் ஒய்வூதிய சான்றிதழ்களும் சுமார் 17 பேருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 160

---

4-ம் கட்ட பேச்சுக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

பூநகரி முகாமை அகற்றுமல் பாதை திறக்கலாம் என்றே அரசு தரப்பினர் புலிகளிடம் வலியுறுத்துவர் எனவும் கொழும்பில் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி.ரி)

---

சமாதானம்

(1ம் டக்கத் தொடர்ச்சி)

வும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

மூன்றும் கட்டப் பேச்சின் போது தமிழரின் அன்ருட பிரச்னைகளை தீர்க்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவை பற்றிய விபரங்களை புலிகள் மீண்டும் ரச தரப்பினரிடம் வற்புறுத்திய போதும் அவை எவற்றுக்குமே பதில் வழங்காது தலைமைப்பீடத்துடன் ஆலோசித்த பின்பே முடிவு அறிவிக்கப்படுமென அரச தரப்பினர் கூறிச் சென்றதும் தெரிந்ததே. (சி-ரி)

---

## கண்சிகிச்சை

[நெல்லியடி]

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரபல கண் வைத்திய நிபுணர் திரு. கே. குகதாசனினால் சுமார் 35 கண் பார்வையற்ற நோயாளருக்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த கண்சிகிச்சை கிளினிக் மாசி மாத முற்பகுதியில் நடாத்தவிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 160

---

## குரங்கு கடித்து காயம்

(அரியாலை)

மானிப்பாயில் சிறுமி ஒருவருக்கும் அவரின் தாயாருக்கும் மரத்தில் நின்ற குரங்கு பாய்ந்து பலமாக கடித்தது.

முகம், தோள்மூட்டு ஆகிய இடங்களில் காயங்களுடன் அவர்கள் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இச்சம்பவம் கடந்த 21ம்திகதி சனிக்கிமை இடம் பெற்றது. 59

# அரசியலமைப்பு குறித்து

# ஜே. ஆர், அமைச்சர் பீரிஸ்

## ஐ. தே. க. எம். பிக்களுக்கு விளக்குவர்

(கொழும்பு)

அரசியலமைப்பு தொடர்பாக ஐ. தே. க. நாடாளுமன்ற எம். பிக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அமைச்சர் ஜி. எல். பீரிசும் விளக்கவகுப்புகளை நடாத்தவுள்ளனர்

அரசியல் அமைப்பிலுள்ள குறிப்பிட்ட நல்ல விடயங்கள் குறித்து மேற்படி இருவரும் விசேட விளக்கவுரைகளை ஐ. தே, க.எம்.பிக்களுக்கு நடாத்தவுள்ளதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே திரு. ஜெயவர்த்தனா இவ்வாறான விளக்கத்தை ஐ. தே. க. எம். பிக்களுக்கு வழங்குவாரென தெரிவிக்கப்பட்டது. தன்னால் கொண்டுவரப்பட்ட தற்போதைய அரசியலமைப்பில் உள்ள பல நல்ல விடயங்கள் குறித்து இந்த எம். பி.க்களுக்கு ஆலோசனை வழங்குவதுடன் நாடாளுமன்றில் இது தொடர்பாக விவாதம் நடக்கும்போது இவை பற்றி எப்படி கருத்துகளை தெரிவிக்க வேண்டும் என்பது குறித்தும் திரு. ஜெயவர்த்தனா விளக்கவுள்ளார்.

இதேவேளை அமைச்சர் பீரிஸ் புதிய அரசியலமைப்புமாற்றம் குறித்தே இவர்களுக்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு ஐ. தே. க. எதிர்ப்பு தெரிவித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -சி

# 1500 ஆசிரியர் பயிலுநர்க்கு பயிற்சி வழங்க முடிவு

(கொழும்பு)

1995/96-ம் ஆண்டு காலப் பகுதியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு புதிதாக 1500 ஆசிரிய பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இந்த அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.

ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு பேராதனை, போகம்வலை, மஹரகம, பலாலி ஆகிய ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் இன்று 25-ந் திகதி ஆரம்பமாகும்.

ஏனைய பயிற்சிநெறிகள் 30-ந் திகதி ஆரம்பமாகும். -இ

# மட்டு. மாவட்டத்தில் 10,642 விதவைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் 10,642 பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் இயற்கை மரணத்தினால் தமது கணவன்மாரை பறிகொடுத்தவர்களைவிட யுத்தத்தினாலும் வன்முறைச் சம்பவங்களினாலும் கடத்தப்பட்ட, காணாமல்போன, விசாரணைக்கென கொண்டுசெல்லப்பட்டமை காரணமாக விதவைகளாக்கப்பட்டோரே அதிகமாகும். -71

# மாகாண அமைச்சின் கீழுள்ள சகலஊழியர்க்கும் இடமாற்றம்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் நான்கு வருட சேவையை முடித்துக்கொண்ட சிற்றூழியர் முதல் சகல தரப்பட்ட ஊழியர்களுக்குமான இடமாற்றப் பட்டியல்கள் வடக்குக் கிழக்கு மாகாண உள்துறை அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இடமாற்றம் பெறும் அனைத்து ஊழியர்களும் திருகோணமலைக்கும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்குமே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் இன்னும் சில தினங்களில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று உள்துறை அமைச்சைசேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தற்போது பணிபுரியும் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்துக்கே எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(71-சி)

## கண்டெடுக்கப்பட்டது

கொக்குவில் ஸ்ரீ கேசவன் என்பவர் முத்துப்பிள்ளை செல்லப்பா 554, மாவிட்டபுரம் தெல்லிப்பளை (அடையாள அட்டை இல. 365120269 V) என்பவரின் அடையாள அட்டையை கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். -59

# திருடிய ஆட்டை கைவிட்டு ஓட்டம்

(உடுவில்)

களவாக ஆடு ஒன்றினை திருடிச் சென்றவரின் நடவடிக்கை ஊர் மக்கள் விழித்துக்கொண்டதால் முறியடிக்கப்பட்டது.

திருடப்பட்ட ஆட்டையும் தமது சைக்கிளையும் போட்டுவிட்டு திருடன் தப்பி ஓடிவிட்டானாம்.

உரும்பராய் வடக்கில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

சம்பவதினம் வீட்டுக் கொட்டகையில் கட்டப்பட்டிருந்த ஆடொன்றினை இரவு வேளையில் சைக்கிளில் வந்த திருடன் அவிழ்த்துக்கொண்டு செல்கையில் ஊர் மக்கள் சந்தேகப்பட்டு கூக்குரலிட்டு ஆரவாரப்பட திருடிய ஆட்டையும் சைக்கிளையும் கைவிட்டுவிட்டு திருடன் ஓட்டம் எடுத்தாராம். -109-சி

மட்டு: மாவட்டத்தில்

# 1,091 ஆசிரியருக்கு பதவி வெற்றிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1091 ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகர்ப்பகுதி மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் தேவைக்கதிகமான ஆசிரியர்கள் இருக்கும் இதேவேளை தமிழர் செறிந்து வாழும் கிராமப்புறப் பகுதிகளில் பல வெற்றிடங்கள் உள்ளன.

மட்டக்களப்பில் தற்போது ஆரம்ப ஆசிரியருக்கு 488 வெற்றிடங்களும், கணிதம், விஞ்ஞான ஆசிரியர்களுக்கு 201 வெற்றிடங்களும், ஆங்கில ஆசிரியருக்கு 246 வெற்றிடங்களும் உள்ளன.

மேலும் இப்பகுதியில் 30 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலும் சில இடங்களில் 57 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## நெல் அறுவடை ஆரம்பம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் மழை நின்றதால் கிராமப்பகுதிகளில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. -59

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பாவனையாளர்களுக்கு ஜனவரி மாதத்துக்கான மண்ணெண்ணை விநியோகத்தை மேற்கொண்டுவருகிறது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணை 20 ரூபா வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. -162

போராளிகள்

# சகலதுறைகளிலும் ஆற்றல் பெற வேண்டும்

—தமிழ்ச் செல்வன் உரை

(யாழ்ப்பாணம்)

''தமிழரின் பாரம்பரிய கலைகள் பண்பாடுகள், எமது விடுதலைப் போராட்டத்துடன் நெருங்கிய உறவைக்கொண்டதாகும். எமது போராளிகள் போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடாது பலவகையான துறைகளிலும் ஆற்றல்மிக்கவர்களாக விளங்கவேண்டும். ஒரு போராளி எத்துறையில் அதிக நாட்டம்கொள்கிறாரோ அத்துறையில் அவருக்குப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இதுவே எமது தேசியத் தலைவரின் விருப்பமாகும்.''

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் போராளி வசந்தனின் மிருதங்க அரங்கேற்ற விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தமது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மங்கள விளக்கை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

திரு. தமிழ்ச்செல்வன் தொடர்ந்து உரையாற்றுகையில்; போராட்டங்கள் மத்தியிலும் போராட்டப் பயிற்சிகளுடன் கலைப்பயிற்சியையும் ஒரே நேரத்தில் எமது போராளி வசந்தன் கற்றுக்கொண்டது அவர் போராட்டம் போன்று கலையையும் வெகுவாக நேசித்துள்ளார் என்பது வெளிப்படையாகிறது. நாம் இன்று ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகிறோம். எமது வாழ்க்கை முறைகள் அரசியலுடன் பின்னிப் பிணைந்து இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (162 ரி)

## கடலில் வீழ்ந்து காயம்

(நெல்லியடி)

இழுவைப்படகிலிருந்து மூடைகளை இறக்கிய தொழிலாளி ஒருவர் தவறுதலாக கடலில் வீழ்ந்து முகத்தில் காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் இடம்பெற்றது.

ஆவரங்காலைச் சேர்ந்த தங்கன் (வயது 35) என்பவரே முகத்தில் காயமேற்பட்ட நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (160)

# மூளைக் காய்ச்சலால் 15 பேர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் வெகு வேகமாகப் பரவிவரும் மூளைக்காய்ச்சல் நோயால் 15 பேர் மரணமாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பன்றி இறைச்சியின் மூலம் பரவும் ஒருவகையான வைரசினாலேயே இந்நோய் பரப்பப்படுவதாகவும் இந்நோயை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மூளைக்காய்ச்சலை கட்டுப்படுத்தும் பணிகளில் சுகாதார அமைச்சு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு-சி)

வேலையற்றோருக்கு

# தொழிற் பயிற்சி பாட நெறி

(மானிப்பாய்)

தமிழ் மொழி மூலம் கல்வி கற்று வேலையற்றிருப்பவர்களுக்கு இலங்கை வணிகர் சம்மேளனத்தினால் தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 25ம் திகதியாகும். விண்ணப்பம் செய்பவர்கள் பணிப்பாளர் அபிவிருத்தி 3-ம் நிலை 242, ஹவ்லொக் றேட் கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். -71

# மழையினால்! நெற்செய்கை பெரும் பாதிப்பு

(உடுவில்)

கடந்த சில நாட்களாக பெய்த பெருமழையினால் வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசங்களைச் பல நெற்செய்கையாளர்களுக்கு பெரும் பாதிப்பேற்பட்டுள்ளது.

அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த பல நெற்பயிர்கள் பெருமழை காரணமாக பெரிதும் பாதிப்படைந்துள்ளன. பெரும்பாலான வயல் நிலங்களுள் வெள்ளம் நிறைந்துள்ளது.

மிளகாய், வெங்காயம் மற்றும் மரக்கறி செய்கையாளர்களையும் இப்பெருமழை பாதிக்கச் செய்துள்ளது.

உரும்பராய். உடுவில், மருதனார்மடம், இணுவில் போன்ற தோட்ட வெளிகளில் மழையுடன் கூடிய காற்றினால் பெருமளவில் வாழைத் தோட்டங்கள் பாதிப்படைந்துள்ளன. வாழைக்குலைகளுடன் பல வாழைகள் முறிந்துபோயுள்ளன. (108)

# அதிகார பரவலாக்கம் பற்றி புலிகளுடன் அரசு பேசும்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அதிகாரப் பரவலாக்கம் குறித்து விடுதலைப்புலிகள் உட்பட சகல அரசியல்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என நீதிமற்றும் நாடாளுமன்ற விவகாரஅமைச்சர் ஜீ. எல், பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாயாளர் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறுஅவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; புதிய அரசமைப்பு நகல்திட்டம் குறித்து பொது மக்களின் அபிப்பிராயம் பெறப்படவுள்ளது. பொதுமக்களும் பொது அமைப்புகளும் இது குறித்து தங்கள் கருததுக்களை எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் தெரிவிக்கலாம்.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப்பேச்சுக்கள் முடிவடைந்து தீர்வொன்று எட்டப்படும்போது அதிகாரப் பரவலாக்கல் குறித்து இந்த உத்தேச அரசமைப்பு நகல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு நாடாளுமன்ற ஆட்சிமுறை நடைமுறைக்குவர குறைந்தது இன்னும் 8 மாதங்களாவது செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## திகதி நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோச்குடன் நடைபெற இருந்த 1994/95க்கான வதிவிட வேளாண்மைப் போட்டி யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட மழை காரணமாக கடந்த 15-ம் திகதியிலிருந்து மேலும் 30-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிய ஆளாட்சி அதிகாரியாக

## பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

புதிய ஆளாட்சி அதிகாரியாக பேராசிரியர் பேர்ட்ரம் பஸ்தியம்பிள்ளை பதவிப்பரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடத் தலைவராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

அரசாங்க நிர்வாகத்திலும் கல்வித்துறையிலும் இவருககு நிறைந்த அறிவுள்ளதாக தெரிவிர்கப்பட்டது. இ

## ஓய்வு பெற்றார்

(நெல்லியடி)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் சுமார் 25 வருட காலம் அழைப்பாணை வழங்குநராகவும், வெலியாத்து நிறைவேற்றுநராகவும் பணிபுரிந்து வந்த புலோலி மத்தி பருத்தித்துறையைச்சேர்ந்த திரு. கதிரவேலு தங்கவேலாயுதம் கடந்த மாதம் ஓய்வு பெற்றுள்ளார். -160

3 வைத்தியசாலைகளுக்கு

## ஆட்டோக்கள் அன்பளிப்பு செய்வதற்கு ஏற்பாடு

[நெல்வியடி]

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று வைத்தியசாலைகளுக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் மூன்று 'ஆட்டோ வண்டிகள்' அன்பளிப்புச்செய்யப்படவிருக்கின்றன.

நோயாளர்களின் நலன் கருதியே இந்த ஆட்டோ வண்டிகள் யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை போன்றவைகளுக்கு கிடைக்கவிருக்கின்றன. -160

மின்சார

## திருத்த வேலை ஆரம்பம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்திற்கு விரைவில் மின்சாரம் வர இருப்பதையொட்டி யாழ். நகர் பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் போடுதல், மின்சார இணைப்புக் கம்பிகள் போடுதல் ஆகிய வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே யாழ். அர்ச்சுனா (ஸ்ரான்லி). யாழ். இராசாவின் தோட்ட வீதி ஆகியவற்றில் மின்சார திருத்த வேலைகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. -59

## நீர்ப்பாசன அமைப்புகளில் 3600 முறைப்பாடுகள்

[கொழும்பு]

நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளில், மகாவலி நிர்மாண காணி சுவீகரிப்பு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளில் ஊழல்கள் இடம்பெற்றதாகவே கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை 3600 முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. விக்ரோறியா, ரன்தெனிகல, ரன்கந்த, கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களில் நிர்மாணிக்கும் வேலைகள் தொடர்பாக காணிகள் சுவீகரிப்பு நட்டஈடு வழங்கல்கள் பெருமளவு அரசியல் அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த ஒழுங்கீனங்கள் குறித்து விசாரணைக் குழு விசேட கவனம் செலுத்துவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார். -கே-ரி

## தொழில்நுட்ப ஆசிரியர் சேர்ப்பு

(கொழும்புத்துறை)

தொழில்நுட்ப பாடசாலை ஆசிரிய சேர்ப்பு போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இன்று வரை கிடைக்கப் பெறாதோர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். 154

# ராவ் - அர்ஜுன் சிங் மோதல் வலுக்கிறது

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி, நரசிம்மராவுக்கும் முன்னாள் மனிதவள அமைச்சர் அர்ஜுன் சிங்கிற்கும் இடையில் மோதல் அதிகரித்துவருவதையடுத்து அவரை இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் பிரதமர் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக அறியப்படுகிறது.

அர்ஜுன் சிங் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்படும் பட்சத்தில் அவருடன் கூட்டுச்சேர்வதற்கும் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் முயற்சி செய்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

உத்தரபிரதேச மாநிலத்தில் நடை பெற்ற கூட்டம்ஒன்றில் உரையாற்றிய அர்ஜுன்சிங் பிரதமர் நரசிம்மராவ் நிகழ்கால செயற்பாடுகளை விட கடந்த கால செயல்பாடுகளிலேயேகவனம்செலுத்துவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளையில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதான பேச்சாளர் வி. எம். காட்கில் பிரதமரின் பொருளாதாரக் கொள்கையை கடுமையாக விமர்சித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் பி. வி. நரசிம்மராவுக்கும் அர்ஜுன்சிங்கிற்கும் இடையிலான பிளவுகளை சீர்செய்யும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக மத்திய அமைச்சர் ராஜேஸ் பைலட் தெரிவித்துள்ளார், க-இ

தென்னாபிரிக்க

## உப-ஜனாதிபதி பதவி விலக அறிவிப்பு

(ஜொகனர்ஸ்பேக்)

தென்னாபிரிக்க உப ஜனாதிபதி எச். டபிள்யு.டி. கிளார்க் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளமையையடுத்து கூட்டணி ஆட்சியில் பெரும்பிளவு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இது தொடர்பாக உப-ஜனாதிபதி கிளார்க் தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவைச் சந்தித்து பேசசுவார்த்தை நடாத்தியுள்ளார்.

திரு. கிளார்க் ஜனாதிபதியாக இருந்த வேளையில் சுமார் 300 பொலிசார் பாலியல் வன்முறை மற்றும் மனித உரிமை மீறல் விடயங்களில் ஈடுபட்டனர் என்று எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்தே உப ஜனாதிபதி கிளார்க் தமது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார். க

## பி. பி. ஸி. நிருபர் மன்னிப்பு கோருகிறார்

(கொழும்பு)

பி. பி. ஸி. கொழும்பு நிருபர் திரு. ஜோர்ஜ் ஆர்னி தனது தவறுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்டுள்ளார்.

திக்வலயில் பௌத்த விகாரை ஒன்றில் புத்த பெருமானின் மடியில் அமர்ந்திருந்து புகைப்படம் எடுத்த போது பி பி. ஸி. கொழும்பு நிருபர் ஜோர்ஜ் ஆர்னியும் மற்றொரு பி. பி.ஸி. நிருபரும் இவர்களுக்கு வழிகாட்டியாக சென்ற பெண ஒருவரும் பொலிசாரினால்கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட மூவரும் தலா 25,000 ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். தற்போது பி. பி.ஸி. நிருபர்கள் இருவரும் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்கள். சி

# நிர்வாக சேவைக்கு 13 தமிழர் தெரிவு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு 13 தமிழர் உட்பட பெருமளவினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அரச செய்திக் குறிப்பொன்றுதெரிவிக்கிறது,

இவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் வழங்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் எனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற போட்டிப்பரீட்சைமூலம் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இப்பரீட்சைக்கு பெருமளவு பட்டதாரிகள் தோற்றியமை தெரிந்ததே. க-சி

மன்னார்— கற்பிட்டி

# கப்பல் சேவை தினசரி நடத்த ஏற்பாடு

(கொழும்பு(

மன்னார் - கற்பிட்டி கப்பல் சேவையை தினசரி நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சம்பந்தப் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: தற்பொழுது (ஐரிஸ்மோரா' ன்ற கப்பல் இச் சேவையில் ஈடுபட்டுவருவதாகவும் ஆனால் வாரத்தில் ஒரு சில தினங்களே இச் சேவை நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இச் சேவை தினசரி நடைபெறுமானால் பெருமளவு பயணிகள் நன்மை பெறக் கூடியதாக இருக்குமென்றும் பரவலாகக் கருத்து தெரிவிக்கப்படுவதும் இங்கு குடுப்பிடத் தக்கது. க

அமைச்சர்களின் வாகனங்களும்

# அலரி மாளிகைக்குள் செல்வதற்கு தடை!

(கொழும்பு(

ஜனாதிபதி சந்திரிகாவின் தறபோதைய வாசஸ்தலமான அலரிமாளிகைக்குள் அமைச்சர்களின் வாகனங்களும் செல்வதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

ஜனாதிபதி மாளிகைக்குள் அணமையில் வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து பாதுகாப்பமைச்சு இவ்வாறு கடும் உத்தரவை பிறப்பித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை ஜனாதிபதியின் பாதுகாப்பு அமைப்பு முறை உடனடியாக மாற்றப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாப்பு படையினர் தீவிரவிசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அலரிமாளிகையில் வெடிமருந்துகளுடன் கைது செய்யப்பட்ட இரு கமாண்டோப் படையினரும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகுட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டன் வனசிங்க பதவி விலகும் நிலை ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. க-சி

யாழ். பல்கலைகழகத்திற்கு

# 52மாணவர்களுக்கு விசேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 1993,94 கல்வியாண்டிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மேலும் 52 மாணவர்களுக்கு விசேட அனுமதி வழங்கபபட்டுள்ளது.

இதுபற்றி மேலும தெரிய வருவதாவது: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விசேடமாக 1993 94 கல்வி ஆண்டிற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது,

இதன்படி நாடகமும் அரங்கியலும் கற்கை நெறிக்கு 14 மாணவர்களும், கிறிஸ்தவ நாகரீகம், கற்கை நெறிக்கு 34 மாணவர்களும் வரலாற்றுத் துறைக் கற்கை நெறிக்கு 2 மாணவர்களும்', சமஸ்கிருத கற்கை நெறிக்கு 2 மாணவர்களுமாக52 மாணமாணவர்கள் விசேட அனுமதி பெற்றுள்ளார்கள். 162-154

### மணிவாக்கு

கோபத்தை அன்பாலும் அமைதியாலும் வெல்லுங்கள். பேராசை ஏற்பட்டால் பெருந்தன்மையாக இருந்து வெல்லுங்கள். பொய்மையை உண்மையால் வெல்லுங்கள். — திருமூலர்.

# பிரேமா, காமினி புதல்வர்கள்

## ஐ. தே. க அமைப்பாளர்களாகினர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித்துக்கும் காமினி திஸநாயக்காவின் மகன் நவீனுக்கும் ஐ. தே. க மாவட்ட அமைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரேமாவின் மகன் சஜித் அம்பாந்தோட்டை அமைப்பாளராகவும், காமினியின் மகன் நவீன் பாததும்பர அமைப்பாளராகவும் ஐ. தே. வின் நடவடிக்கை குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்,

தற்போது வெற்றிடமாகவுள்ள இரு நியமன எம். பிக்கள் பதவிகளில் ஒன்றுக்கு திருமதி ஹேமா பிரேமதாசாவை நியமிக்குமாறு சிலர் கட்சித்தலைமைப்பீடத்தை வலியுறுத்திவந்தபோதும் அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாம். மேலும் பிரேமா,காமினி ஆதரவாளர்கள் கட்சிக்குள் ஒதுக்கப்பட்டு வருவதால் இருவரதும் ஆதரவாளர்களான 20 எம். பிக்கள் பொ. ச முவுடன் இணையப்போவதாக செய்திகள் வெளிவந்த இந்நேரத்தில் மேற்படி இருவரதும் புதல்வர்கள் மாவட்ட அமைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். -சி

### சிறுதானிய செய்கை பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக பெய்த பெருமழையினால் சிறுதானியச் செய்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன எனச் சிறுதானியச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். 154

## நமது நோக்கு

### மந்தகதி

இலங்கையிற் 'சில' விஷயங்கள் படுவேகமாக நடந்தாலும் வேறு சில நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் மந்தகதியிலேயே நடைபெறுகின்றன.

இதுபற்றி— இங்கல்ல — சர்வதேச மட்டத்திலேயே கூர்மையாக நோக்கப்பட்டு, மதிப்பீட்டு அறிக்கைகள் வெளிவருகின்றன.

அபிவிருத்திக்காக— மக்களின் நிரந்தர நன்மைக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இதற்காக ஆசிய வங்கியும் உலக வங்கியும் பல கோடி ரூபாய்களை வழங்கின ஆனால் அத் திட்டங்களின் நிறைவேற்று வேகம், அளித்த பலாபலன்கள் ஆகியவற்றை ஆராய்ந்த அந்த நிறுவனங்கள் வேதனையோடு பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளன.

திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டமையையும் அதனால் உரிய பலாபலன்கள் மக்களால் அனுபவிக்க முடியாமையையும்விளக்கியுள்ளார்கள்.

திட்டங்களின் வெற்றி விகிதம் 1981 — 1991 காலப்பகுதியில் வீழ்ச்சி அடைந்துள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கான அடிப்படை காரணங்களை அறிய ஆழ்ந்த ஆராய்ச்சி அவசியமா?

மந்தகதிக்கான காரணம் உள்நாட்டுப் போர் என்பதை மறுப்பவர் யார்?

தனியரசு அமைத்து ஆண்ட இனத்தை நசுக்கி நலிவடையச் செய்து இலங்கைத் தீவு முழுவதையும் ஓரின நாடாக மாற்றலாம் எனத் தவறாகக் கணித்துச் செயற்பட்டதன் விளைவே இது.

எரியும் நெருப்பை எப்படியும் அணைத்துவிடலாம் என்ற நினைப்போடு செயற்பட்டார்கள்.

ஆனால்— விடுதலை நெருப்பு வெறும் தண்ணீரைக் கண்டு தணிந்தா போகும்?

அரசின் போலியான அறிக்கைகளின் அடிப்படையில், உலக நிறுவனங்கள் வாரி வழங்கின.

இன்று - வெற்றி விகிதம் வீழ்ச்சி கண்டதையும், செயற்பாடுகள் மந்தகதி அடைந்ததையும் சர்வதேச நிறுவனங்கள் உணர்ந்திருப்பது நல்ல அறிகுறியே.

ஏனெனில் - இதுபற்றி முன்பு பலர் எடுத்துக் கூறியும் ஏற்காது, கேட்ட தொகைக்கு மேலாகவே கொடுத்தது பழைய கதை!

## பலதும் பத்தும்

### மருத்துவர்கள்

பிணங்களைக் கிறிக்கிழித்துப் படித்து, நோயாளர்களுடன் காலம் கழிக்கும் மருத்துவர்களின் உள்ளமும் மரத்துப்போயிருக்கும் என்றுதான் சிலர் எணணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் சிறந்த கலைஞர்கள் என்பதே உண்மை!

1974ல்....கொழும்பில் ... யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் 150வது ஆண்டு விழா நடந்தபோது ''கர்வேரி'' என்ற நாட்டிய நாடகத்தையும் அதற்கான பாடல்களையும் எழுதியது யார்? பிரபல கண்வைத்திய நிபுணர் எஸ். ஆனந்தராசனே!

புல்லாங்குழல் என்றால் மறைந்த மருத்துவர் பொன்னம்பலமும், க. கெங்காதரமும் நினைவுக்கு வருகிறார்கள்.

இன்று இளம் மருத்துவர்களான வி. இந்துமதி வீணையிலும், செ. நளினி வயலினிலும், பா. கலையரசி, க சிவயோகன் நாடகத்திலும் இலைமறைகாய்களாக விளங்குகிறார்களாம்!

—மயூரன்

## இராசி பலன்

25—1—1995

புதன்கிழமை

(தமிழுக்கு தை 11)

நவமி மாலை 5-23 வரை, விசாகம் ந. இ. 12-18 வரை சித்தாமிர்தயோகம், இராகு காலம் நண்பகல் 12-36 முதல் 2-06 வரை, சுபநேரம் மாலை 5-06 முதல் 6-36 வரை.

மேஷம்: தொழில் முரண்பாடு தனவிரயம் யோசனை.

இடபம்; வாக்குவன்மை, மாமியார் உதவி சயனசுகம்.

மிதுனம்; சுபகாரியம் குடும்பசந்தோசம் பெண் அறிவுரை.

கடகம்: மனசஞ்சலம் குறுகியசிந்தனை பணமுடை.

சிங்கம்: தாயார் கோபம், முயற்சி தாமதம் அலைச்சல்.

கன்னி: புதியவருவாய் சம்யோசித முடிவு உல்லாசம்.

துலாம்: கடமை பாதிப்பு, முன்கோபம் புத்திரர்கவலை.

விருச்சிகம்: காரிய சித்தி, நண்பர் சகவாசம் பயணம்.

தனுசு: தெய்வசிந்தனை, மனச்சுமைதொழில் பகைமை.

மகரம்; விவேகமானசெயல் பணவரவு அயலவர் நட்பு.

கும்பம்: பிதா நன்மை சகோதரபாசம் வாக்குவசீகரம்.

மீனம்: குதர்க்கவாதம், கடன்படல் தொழில் ஏமாற்றம்.

ஜோஸ்யர்

''வடக்கு—கிழக்கு

# தமிழர்களின் தாயகம் என அங்கீகரிக்கப்பட வேண்டும்''

— ந. ச. ச. க. பொதுசெயலாளர்

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டுமானால்அதுவடக்கு கிழக்கை தமிழர்களின் தாயகம் எனவும், தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதும் அரசியல் அமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படும்போது மட்டுமே சாத்தியமாகும்,

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலர் கலாநிதி விக்கிரம பாகுகருணாரத்ன கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில்:

வடக்கு-கிழக்கு தமிழர்களின்தாயகம் என்பது அங்கீகரிக்கப்படவேண்டும் அத்தாயகத்தில் அவர்களது முழுமையான சுயாட்சி வழங்கப்படவேண்டும்' அச்சுயாட்சி அரசிற்கு அவர்களின் தேவைக்கு ஏற்ப அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும்

நிதி மூலவளங்களைப்பொறுத்தவரையிலும் தேவையான அளவு நிதி வழங்கல் கிடைப்பதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும்'

விடுதலைப்புலிகளைப்பொறுத்தவரையில்அவர்களின்போராட்டம் நியாயமானது. நாம் இடதுசாரிகள் என்ற வகையில் அரசுக்கு எதிரான அவர்களின் போராட்டத்தை நாம் ஆதரிக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் முக்கிய கோரிக்கைகளான யுத்த நிறுத்தம், போக்குவரத்துப் பாதையை திறத்தல்; அகதிகளை மீளக்குடியேற்றல், கடல் வலய தடையை நீக்குதல் போன்றவற்றிற்கு எந்தவித நிபந்தனையும் இல்லாது நாம் ஆதரவினைவழங்கல்வேண்டும்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—01—25

புதன் இரவு

08-01 குயிலோசை- நிகழ்ச்சியில் ந, கோகுலன் எழுதிய 'குயிலோசை' கிராமிய நிகழ்வு- பகுதி02
08-20 ஏர்முனை ''கொள்கலன்களில் பயிர் வளர்க்கலாம்'' சித்திரம்
08-30 செய்திகள்
08-40 நாடகம் கலையரசன் எழுதிய ஏழை அழுத கண்ணீர்''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995—01—26

வியாழன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 விடுதலைகீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—01—25

புதன் மாலை

05.01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிக் கீதம்
05-10 புதியவை
05-15 பட்பாடல்கள்
05-30 அறிவூற்று- நிகழ்ச்சியில் விஞ்ஞான பாடத்தின் வெப்பம் நான்காம் பகுதி- வழங்குபவர் ஆசிரியர் ஈசன் அவர்கள், வர்த்தகம் எனும் பாடத்தில் காப்புறுதி நான்காம் பகுதி வழங்குபவர்- விஜேஜேந்திரன் ஆசிரியர் அவர்கள்
06-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 தொடர்ந்து உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்,

வடக்கு—கிழக்கு

# ராணுவ முகாம்களிலிருந்து

## துப்பாக்கிகள் குண்டுகள் கடத்தல்

(கொழும்பு)

வடக்கு—கிழக்கு இராணுவ முகாம்களில் இருந்து குண்டுகள், துப்பாக்கிகள், ரவைகள்போன்றபொருட்கள் கடந்த காலத்தில் கடத்தப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அலரி மாளிகையில் படையினர் ஒருவரிடமிருந்து வெடிமருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்ட பின்பே இதே போன்ற சம்பவங்களும் வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இப்படியான சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இராணுவ உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக 'லங்காதீப' மேலும் தெரிவித்தது. -ம

இராணுவ அதிகாரிகள் எவரும்

# யாழ்.செல்லமறுப்பு தெரிவிக்கவில்லை

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்றுவதற்கு யாழ்ப்பாணம் செல்வதற்கு எந்த இராணுவ அதிகாரியும் மறுப்புத் தெரிவிக்கவில்லையென்று பிரிகேடியர் நளின் அங்கமன 'திவயின' வுக்கு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் செல்வதற்கு இராணுவ அதிகாரியைத் தெரிவு செய்தது இராணுவத் தளபதியாகும். இருந்தபோதிலும் எந்த இராணுவ அதிகாரியும் யாழ்ப்பாணம் செல்வதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை என்று பிரிகேடியர் அங்கமன 'திவயின'வுக்கு மேலும் தெரிவித்தார். -ம

# வணிகஜோதி மலர் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் வணிகஜோதி 17-வது மலர் வெளியீட்டுவிழா நாளை 26ம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

செல்வன் க. ஜெக்சன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறபபு விருந்தினர்களாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் வெ. இளங்குமரன், வலயம் 1 உதவிக் கல்விப்பணிபாளர் வ. தானையா, வர்த்தகம் சிறப்பு அலுவலர் திரு. வ. க. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர்.

கல்லூரி முன்னைநாள் அதிபர் மு. இராமலிங்கம் நூலை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் சி. தனபாலசூரியர் பெற்றுக் கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. நந்தகுமாரன், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே. கே. அருள்வேல் ஆகியோர் ஆய்வுரையை நிகழ்த்துவர்.

# மலையகத்தில்கைது அதிகரிப்பு

## இளைஞர் மத்தியில் பதற்றம், பீதி

[கொழும்பு]

மலையகத்தில் பயங்கரவாதப் பிரச்சாரம் மீண்டும் திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாககொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

இதன் உடனடி விளைவாக கடந்த இரண்டு மாதங்களாக ஹட்டன், டிக்கோயா பகுதி தோட்டங்களைச் சேர்ந்த 12ற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

1989/90ம் ஆண்டுகளில் ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் இவ்வாறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் விளைவாக நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். ஆண்டுகள் பல கடந்தும் இவர்கள் பற்றிய எவ்வித விபரங்களையும் பெறமுடியாதவர்களாக இவ்விளைஞர்களின் பெற்றோர்கள் உள்ளனர்

கடந்த வருட நவம்பர் மாதத்தில் எட்டு மலையக இளைஞர்கள் அட்டன் பகுதி தோட்டங்களில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் துப்பாக்கி வெடிகுண்டுகள் இருந்ததாகவும் இவர்கள் மலையக விடுதலை முன்னணி என்ற பெயரில் விடுதலைப் புலிகளின் துணைப்படையாக உருவாக்கப்பட்ட இயக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை மலையகத்தில் புதிய பயங்கரவாதக் குழு என 'ஐலன்ட்' பத்திரிகையும் மலையகம் புலிகளின் இன்னொரு முன்னணியாக மாறுமா? என 'சண்டே ஒப்சேவரும்' செய்தி வெளியிட்டன.

மலையகத்திற்குத் திடீர் திடீரென இரவில் வரும் சிவில் உடை தரித்தோர், கண்களைக் கட்டி இளைஞர்களைக் கைது செய்து கொண்டு செல்கின்றனராம். இதனால் மலையக இளைஞர்கள் மத்தியில் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது. -ரி

# பங்களாதேஷ் பிரதமர் இன்று கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஷியா இன்று கொழும்பு வந்துசேரவுள்ளார்

சார்க் அமைப்பின் தலைவி என்ற முறையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அவர் இங்கு வருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பதவியேற்றபின், வெளிநாட்டு அரசியல் தலைவர் ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும்.

இலங்கையில் அமைதி ஏற்படுவதையே பங்களாதேஷ் பிரதமர் விரும்புகிறார் என இலங்கையிலுள்ள பங்களாதேஷ் நாட்டு தூதுவர் தெரிவித்துள்ளார். [கே-ரி)

# மாணவர் சீருடைகள் மார்ச்சில் விநியோகம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்படும்.

இதற்கென 40 கோடி ரூபா பெறுமதியான சீருடை துணிகள் சீனாவிலிருந்து விசேஷமாகத் தருவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள 43 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இந்த சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன. இந்த சீருடைகளை மாணவர்களின் தேவைக்கு ஏற்றவிதமாக வெட்டி அவற்றைத் தனித்தனியே பொதிசெய்யும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இ-ரி

# ★ பாப்பரசர் விஜயத்தின் போது

# குழப்பம் ஏற்படுத்துவதற்கு திட்டமிட்ட சதி முறியடிப்பு!

(கொழும்பு)

பாப்பரசர் இலங்கை வந்த காலப் பகுதியில் சதிமுயற்சி ஒன்றின் மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டுள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த சதித்திட்டத்தை இராணுவக் கப்டன் ஒருவரும் மூன்று அரசியல் வாதிகளும் தீட்டியிருந்தாகவும் எனினும் இதனை சிரேஷ்ட டி. ஐ ஜி. பொலிஸ் அதிகாரி முறியடித்து விட்டதாகவும் அச் செய்தி தெரிவித்துள்ளது.

உரிய நேரத்தில் இந்த சதி முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படுவது தடுக்கப்பட்டதாகவும் அச் செய்தி தெரிவித்தது,

பாப்பரசரின்இலங்கை விஜயத்தை பௌத்த தீவிரவாதிகள் குழப்ப முற்பட்டதும் தெரிந்ததே. (சி - ரி)

# அமைச்சரவைக் கூட்டத்திற் ஜனாதிபதி தாமதித்து வருவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாராந்தம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தை மாதம் ஒரு தடவை நடாத்தலாம் என்று அமைச்சர் ஒருவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா விஜயகுமாரதுங்க அமைச்சரவைக் கூட்டங்களிற்கு உரியநேரத்திற்கு செல்லாமல் தாமதித்தே செல்வதாலே இவ்வாறு அமைச்சர் ஒருவர் ஆலோசனை வழங்கிறாராம்.

அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஜனாதியதி சந்திரிகா உரிய நேரத்தில் செல்லாமை குறித்து பலரும் பல்வேறுதரப்பட்ட கருத்தக்களை கூறி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-ரி

# முன்னாள் அமைச்சர். அர்ஜுன் சிங் இ. கா.விலிருந்து இடைநிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் இ. காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இது உடனடியாக அமுலுக்கு வருகிறது.

கட்சியின் பொதுச்செயலர் ஜனார்த்தன் பூஜாரி இதனை நேற்று புதுடில்லியில் அறிவித்தார்.

திரு. அர்ஜுன் சிங் தாம் விடுத்த அறிக்கைகள் மூலம் கட்சியின் தோற்றத்தையும் நலன்களையும் களங்கப்படுத்தி விட்டார் என்றும் கட்சித் தொண்டர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் திரு. ஜனார்த்தன் பூஜாரி கூறினார்.

கட்சியின் அரசியல் விதிமுறைகளின் கீழ் தமக்கு உள்ள அதிகாரத்தின்படி கட்சித் தலைவர் நரசிம்மராவ் திரு. அர்ஜுன் சிங் மீது இந்நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம் திரு. அர்ஜுன் சிங் காங்கிரஸ் காரியக்கமிட்டியிலும், கட்சியின் ஏனைய குழுக்களிலும் இப்போது உறுப்பினராக இருக்க முடியாது,

முன்னர் வந்த செய்தி 4ம் பக்கத்தில் உள்ளது.

கே-ரி

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் போதிய வாகனங்களின்றி அரச படையினர் அவஸ்தை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இராணுவ முகாம்களில் போதிய வாகனங்கள் இல்லாததால், படையினர் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது,

யுத்தம் நடக்கும் காலங்களில் காயமேற்படும் இராணுவத்தினரை வைத்தியசாலைகளுக்கு அனுமதிப்பதற்கு வாகனங்கள் இல்லாதிருக்கின்றதென்றும் இராணுவ முகாம்களுக்கு தேவையான தண்ணீரை எடுத்து வருவதற்கும் வாகன வசதிகள் குறைவாக உள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் இராணுவ முகாம்களில் படையினரின் தேவைகளுக்குப் போதிய வாகனங்கள் இருக்கின்றன என்றும் 'யுக்திப' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ம - ரி)

## தன்னைத்தானே சுட்டு சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

வவுனியாவில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்

இராணுவத்தில் வேலை செய்வது கடினம் என்று கடிதம் என்று கடிதம் எழுதி வைத்து விட்டே தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவச் சிப்பாய் சிறிலங்கா இராணுவத்தின் சிங்கப் படைப் பிரிவைச் சேர்ந்தவராவர். -ரி

## இனப்பிரச்னைத்
### (1ம் பக்கத் தொடர்ச்சி)

வுத்தேசத் திட்டம் பருமட்ட அளவிலான நிலையிலேயே உள்ளது எனவும் விஷயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. -ரி

## வடக்கு—கிழக்குப்
### 1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கு யுத்தத்தில் கடந்தபதினொரு ஆண்டு காலத்திலும்,தெற்கில் 1990ம் ஆண்டில் கிளர்ச்சி நடவடிக்கையின் போதும் பெருந்தொகையானோர் தமது உயிரைத்தியாகம் செய்தார்கள்.

இத்தகைய கிளர்ச்சி நடவடிக்கைக்கான காரணங்களை அடையாளம் கண்டு எதிர் காலத்தில் இவை நிகழாமல் அரசாங்கம் தடுக்கும்,

வடக்கு கிழக்கில் அனுவசியமான யுத்தத்தைத் தொடரும் நிலையில் நாடு இல்லை. இதனால் தற்போதைய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்; என்றார்.

பாதுகாப்பு கல்விக்கழகத்தின் வேந்தர் ஜெனரல் டென்சில் பெரேராவும் இந்த வைபவத்தில் உரை நிகழ்த்தினார், (இ-ரி)

## படைத்
### (1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அமைச்சர்கள் பலர் கேட்டுள்ளனர் என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 19ம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே, அமைச்சர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி படைத் தளபதிகளை அகற்றுவதுடன், இராணுவம், பொலிஸ் போன்ற பாதுகாப்பு அமைப்புக்களில் விரைவில் மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்று அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ம-ரி

## ஐந்து வருடங்களுக்கு
### (1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியினர் கருதுவதாகவும் யுக்திய தெரிவித்துள்ளது.

சமாதானப்பேச்சுக்கள் 3-ம் கட்டத்துடன் தேக்க நிலையை அடைந்துள்ளமைக்கு சிறிலங்கா அரசினதும் இராணுவத்தினதும்விட்டுக்கொடுக்காத தன்மைகளே காரணமென கொழும்பு பத்திரிகைகள் பல சுட்டிக் காட்டியுள்ளதும் குறிப்பித்தக்கது. (ரி)

## வொய்ஸ்
### (1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கப்படும்,

இந்தக்குழுவின் தலைவரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான லஷ்மன் கதிர்காமர் நேற்று பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தினால் கடந்தவாரம் பேச்சு நடாத்தப்பட்டு கைச்சாத்திடப்பட்ட திருத்தப்பட்ட உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் இந்நாட்டு மக்களின் நலன்கள், உடைமைகள் ஆகியன உட்பட இலங்கையின் தேசிய நலன்களையும் பாதுகாக்கும் எனவும் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார், (இ -ரி)

## ஐ. தே. க.
### [1ம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

அரசியல் யாப்பு தொடர்பாகவும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெறும் புனரமைப்புக் கூட்டத்தில், முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் உரையாற்றவுள்ளார். இக்கூட்டத்திற்கு நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸும் அழைக்கப்படுவார் என்றும் திரு. ரணில் தெரிவித்தார்.

ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜா, தம்மை ஜனாதிபதியின் உரைக்குப் பதிலளிப்பதற்காகப் பேட்டி ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தபோதிலும், அது காலதாமதமாகக் கிடைத்ததாலேயே தாம் அதில் கலந்துகொள்ளவில்லை என திரு. ரணில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

கே-ரி

## கந்தளாய்
### (1ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஊழியர்கள் கஷ்ட நிலையை அடைந்தார்கள்

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இத்தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது, இதனால் 1,140 தொழிலாளர் தொழில் இழக்க நேரிட்டது 1000 க்கு மேற்பட்ட கரும்பு தோட்ட விவசாயிகள் தங்களது சம்பாத்தியத்தை இழந்தனர். 100 டிராக்ரர்கள் 50 வாகனங்கள் இயந்திர சாதனங்கள் உபகரணங்கள் என்பன சேதமடைந்துள்ளன,

உள்ளூர் முகவர் ஒருவருக்கு 1992-ம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட இந்த தொழிற்சாலை தொழிலாளர் பிரச்னையை தொடர்ந்து மூடப்பட்டிருந்தது.

அரசாங்கம் இந்த மாத முடிவிற்குள் உற்பத்தியை ஆரம்பிக்குமாறு விடுத்த ஒரு கடுமையான உத்தரவையடுத்து தற்போது இத் தொழிற்சாலை மீண்டும் உத்பத்தியை ஆரம்பித்துள்ளது.

[கே - ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-